I Additional District Court, Thoothukudi.

O.S.No.127/2021 நாள் : 02.06.2026 வா.சா.1– திரு. கண்ணன்.

குறுக்கு விசாரணை :–

வா.சா.ஆ19 நகலை 2020ம் ஆண்டு கடைசியில் எடுத்தேன். அதில் 29.09.2021 அன்று எடுக்கப்பட்டதாக பதிவாகியுள்ளது என்றால் சரிதான். அதை இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட பிறகு எடுத்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ19 பற்றி வழக்குரையில் சொல்லவில்லை. வா.சா.ஆ19ல் 10.12.2008 அன்று சொத்து அடமான வைக்கப்பட்டிருந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ19 அடமானக் கடன் இன்னும் தீரவில்லை. அடமானக் கடன் 12 வருட காலத்திற்கு பிறகு காலாவதியாகிவிடும் என்றால் எனக்குத் தெரியாது. பொதுவாக அடமானக் கடன் கொடுத்த நபர் 12 ஆண்டுகள் வரை பொறுத்திருக்கமாட்டார் என்றால் எனக்குத் தெரியாது. சொத்தை அடமானம் பெற்ற நபர்களை நான் விசாரித்தேன். வழக்கு நிலுவையில் இருக்கும்போது விசாரித்தேன். அடமானம் பெற்ற நபர் சென்னையில் இருக்கிறார். அவரது அலுவலகம் கோவில்பட்டியில் உள்ளது. வா.சா.ஆ19 அடமானம் பல வருடங்களுக்கு முன்பாகவே தீர்ந்துவிட்டது என்றால் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ19 கடன் பற்றி கிரைய ஒப்பந்தம் ஏற்படும்போது எனக்குத் தெரியாது. வழக்கு தாக்கல் செய்யும்போது வா.சா.ஆ19 அடமானக் கடன் பற்றி எனக்குத் தெரியும். வா.சா.ஆ19 கடன் பற்றி வழக்குரையில் ஏன் சொல்லவில்லை என்றால் அந்த விபரம் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ19 கடனுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் உள்ளது. வா.சா.ஆ19ல் உள்ள சொத்து தாவா சொத்து என்பதால் வா.சா.ஆ19க்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் உள்ளது. வா.சா.ஆ19 கடனை பிரதிவாதிதான் அடைக்க வேண்டும். சொத்தின் கடனை அடைத்து

வில்லங்கத்தை சரி செய்து கொடுக்க வேண்டுமென்று சட்ட அறிவிப்பில் சொன்னேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை. வழக்குரையில் சொன்னேனா என்றால் ஞாபகமில்லை. வா.சா.ஆ 19 இந்த வழக்கிற்கு சம்பந்தமில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. பொய்யான குற்றச்சாட்டு பிரதிவாதிமீது சொல்வதற்காக தவறான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 20 அரசு வழக்கறிஞரால் கொடுக்கப்பட்ட சட்டக்கருத்துரை என்றும், அதில் சொத்தை யாருக்கு யார் கொடுத்துள்ளார்கள் என்பது சொல்லப்படவில்லை என்றும் சொன்னால் சரிதான். அ.வ.எண்.121/2002 வழக்கிற்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. இதே தாவா சொத்து மீதுதான் அ.வ.எண்.121/2002 தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு பிரதிவாதி வழக்கை மேற்கொண்டு நடத்தவில்லை என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது. அந்த வழக்கு 04.02.2003 அன்று தள்ளுபடி செய்யப்பட்டதாக வா.சா.ஆ 20 ல் பதிவாகியுள்ளது என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கு பற்றி இந்த வழக்கிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை. வா.சா.ஆ 20–ஐ இந்த வழக்கிற்காக நானே முன்தேதியிட்டு உருவாக்கியிருக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 20 இந்த வழக்கிற்கு தேவையில்லாத ஆவணம் என்றால் சரியல்ல. 24.11.2024 தேதியில் வாட்ஸ் அப் குறுந்தகவல் வந்ததாக வா.சா.ஆ 21 ல் முதல் தாளில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த தேதி இந்த வழக்கிற்காக பின்னிட்ட தேதி என்றால் சரிதான். வா.சா.ஆ 21 உண்மையான ஆவணம்தான். அதில் 25.07.2020 ல் 2 வது மற்றும் 3 வது தாள்களில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 4 வது தாளில் உள்ள குறுந்தகவல் 09.08.2020 லும், அதற்கு அடுத்த தாளில் உள்ள தகவல் 19.11.2020 லும், அதற்கு அடுத்த தாளில் உள்ள தகவல் 25.06.2021 லும்

வந்ததாக பதிவாகியுள்ளது என்றால் சரிதான். அவற்றில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை பற்றி வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை. வா.சா.ஆ 21 உண்மையான ஆவணம் அல்ல என்றும், அறிவியல் தொழில் நுட்பங்களை பயன்படுத்தி அந்த ஆவணத்தை போலியாக தயாரித்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. சுரேஷ் சந்த் மற்றும் ரத்தன் சந்த் ஆகியோரிடமிருந்து பிரதிவாதி அடமானக் கடன் வாங்கியிருந்ததாகவும், அதை அடைப்பதற்காக பிரதிவாதி என்னிடம் கூடுதலாக பணம் வாங்கியதாகவும் சொல்வது உண்மையல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி மேற்படி கடனை அடைப்பதற்காக என்னிடம் பணம் வாங்கியதகா வா.சா.ஆ 1ல் சொல்லப்படவில்லை. பிரதிவாதியின் மகன் கைபேசியிலிருந்து என் கைபேசிக்கு மேற்படி குறுஞ்செய்திகளை அனுப்பியதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களையும் பிரதிவாதி என்னிடம் கொடுத்துவிட்டு நான் கிரையம் முடிக்க அழைத்தபோது பிரதிவாதி வராத காரணத்தினால் காவல்நிலையத்தில் கிரையத்தை முடித்து தரக்கோரி நான் புகார் கொடுத்ததாக சொல்லியிருப்பது உண்மையல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி கிரைய ஒப்பந்தம் ஒருபோதும் எழுதிக் கொடுக்கவில்லை என்றும், நான் பிரதிவாதிக்கு வட்டிக்குத்தான் ரூபாய் 3 லட்சம் கொடுத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. ஆகவே தாவா தள்ளுபடியாக வேண்டுமென்றால் சரியல்ல.

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
தூத்துக்குடி.